// தனிக்கவனம் தேர்தல் பணி // // மிக மிகஅவசரம் //

சென்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.9272/அ2/2023 நாள். 21.03.2024

பொருள்- தேர்தல் – மக்களவை பொதுத்தேர்தல் 2024 –தேர்தல் பணிக்கான நியமன ஆணை - பயிற்சி வகுப்புகளில் கலந்துகொள்ள அறிவுறுத்தல் சார்பாக -

----

மேற்காண் பொருள் சார்ந்து சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் மக்களவை பொதுத்தேர்தல் 2024 சார்ந்து 21.03.2024 அன்று நடத்தப்பட்ட ஆயத்த கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட அறிவுறுத்தல்களின் படி அனைத்து அரசு / அரசு உதவி பெறும் / சென்னை / ஆதிதிராவிடர் நல /ஆங்கிலோ இந்தியன் /உயர்நிலை/ மேல்நிலை/ தொடக்க/ நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் தலைமையாசிரியர் ,ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாப் பணியாளர்களுக்கு தேர்தல் வாக்குச் சாவடி பணிக்கான பயிற்சி வகுப்பு சார்ந்த பணி ஆணை வருவாய்த்துறை அலுவலர்கள் மூலம் சார்ந்த பள்ளித்தலைமையாசிரியர்களிடம் 21.03.2024 முதல் 23.03.2024 க்குள் வழங்கப்படவுள்ளது. பெறப்பட்ட பணி ஆணைகளை அந்தந்த பள்ளித் தலைமையாசிரியர்கள் சார்ந்த ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லா பணியாளர்களிடம் வழங்கி அதற்கான ஒப்புதலை பெற்று சார்ந்த அலுவலரிடம் ஒப்படைக்கவேண்டும். மேலும் தேர்தல் பணிக்கான பயிற்சி வகுப்பு சார்ந்த விவரம் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லா பணியாளர்களின் கைபேசிக்கும் குறுந்தகவலாகவும் அனுப்பப்படும் என்ற தகவலும் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் பணிக்கான முதல் பயிற்சி வகுப்பு 24.03.2024 (ஞாயிற்று கிழமை) அன்று நடைபெறவுள்ளதால்(பயிற்சி வகுப்புகளுக்கான அட்டவணை இணைக்கப்பட்டுள்ளது). தேர்தல் பயிற்சி வகுப்புகளுக்கான நியமன ஆணை மற்றும் குறுஞ்செய்தி பெறப்பட்ட **அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளவேண்டும்** என்று அனைத்து அரசு / அரசு உதவி பெறும் / சென்னை / ஆதிதிராவிடர் நல /ஆங்கிலோ இந்தியன் /உயர்நிலை/ மேல்நிலை/

Scanned with OKEN Scanner

தொடக்க/ நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு:தேர்தல் பயிற்சி வகுப்புகளுக்கான அட்டவணை

21.3.24

முதன்மைக் கல்விஅலுவலர்

21/3/24

சென்னை

பெறுநர்

1 கல்வி அலுவலர் பெருநகர சென்னை மாநகராட்சி,

2 மாவட்டக்கல்வி அலுவலர் (இடைநிலை) வடசென்னை, தென்சென்னை

3 மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக்கல்வி) திருவல்லிக்கேணி.

4 தலைமையாசிரியர்,

அரசு / அரசு உதவி பெறும் / சென்னை / ஆதிதிராவிடர் நல / ஆங்கிலோ இந்தியன் தொடக்க / நடுநிலை / உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள்.

நகல்:

மாவட்ட ஆட்சியர் ,சென்னை மாவட்டம் அவர்களுக்கு தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும் பணிந்து அனுப்பப்படுகிறது.

Scanned with OKEN Scanner